

திருச்சுழி அருகே உள்ள திருச்சுழி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கே.வாகைகுளம் ஊராட்சியில் உள்ள கே.வாகைகுளம் ஊராட்சி கண்மாயில் விவசாயிகள் பயன்பாட்டிற்கு மதகு மறுசீரமைப்பு, வடிகால் பழுதுபார்ப்பு, வண்டல் மண் அள்ளுதல் மற்றும் அணைக்கட்டுகளை தனியார் நிறுவனத்தின் சி.எஸ்.ஆர். நிதிபங்களிப்புடன் கண்மாய் ஆழப்படுத்தபடும் பணியினை மேற்கொள்ள உள்ள நிலையில் இப்பணியினை நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு துவக்கி வைத்து பணியினை பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் முன்னாள் ஒன்றிய தலைவர் பொன்னுத்தம்பி, முன்னாள் ஒன்றிய துணைத் தலைவர் மூக்கையா, விவசாய அணி மாவட்டத் துணை அமைப்பாளர் காளிதாசன், தி.மு.க. பிரமுகர் பாலமுருகன் உள்பட அரசு அலுவலர்கள் மற்றும் கழகத் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் பொது மக்களின் கோரிக்கையின் அடிப்படையில் நாகர்கோவில் மாநகராட்சி, வடக்கு மண்டலத்தில் கிருஷ்ணன்கோவில் மற்றும் கிழக்கு மண்டலத்தில் இளங்கடை பகுதியில் அமைந்துள்ள இறைச்சிக் கூடத்தை மாநகராட்சி அதிகாரிகளுடன் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். ஆய்வில் நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா, மாநகர நல அலுவலர் மருத்துவர் ஆல்பர் மதியரசு, மாநகராட்சி பொறியாளர் ரகுராமன், மண்டல தலைவர்கள் ஜவகர், கு.அகஸ்டினா கோகிலவாணி, சுகாதார அலுவலர்கள் ராஜா, மாமன்ற உறுப்பினர்கள் நெ.கலாராணி, சு.அனிலா, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.சதாசிவன், மாநகராட்சி அதிகாரிகள் உட்பட கழக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

### நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட

# கிருஷ்ணன்கோவில் - இளங்கடை பகுதியில் அமைந்துள்ள இறைச்சிக் கூடத்தில் கள ஆய்வு!

## மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ.மகேஷ் மேற்கொண்டார்!

கன்னியாகுமரி, ஜூன் 14 -

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் பொது மக்களின் கோரிக்கையின் அடிப்படையில் நேற்று (13.6.2025 - வெள்ளிக்கிழமை) காலை நாகர்கோவில் மாநகராட்சி, வடக்கு மண்டலத்தில் கிருஷ்ணன்கோவில் மற்றும் கிழக்கு மண்டலத்தில் இளங்கடை பகுதியில் அமைந்துள்ள இறைச்சி கூடத்தை மாநகராட்சி அதிகாரிகளுடன் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



ஆய்வில் இறைச்சிகளை பொது மக்களிடம் தினசரி விற்பனை செய்யும் முன் அதனை கால்நடை மருத்துவர் அங்கீகரித்த பின்னரே சுகாதாரமான இறைச்சியை விற்பனை செய்ய வேண்டும் எனவும், இறைச்சி வெட்டும் கூடத்தில் உள்ள தரை தளம் மற்றும் கழிவறைகளை தூய்மையாக பராமரிக்க வேண்டும் என அறிவுறுத்தினார்.

சில இடங்களில் இறைச்சி வகைகளை வெட்டி சுகாதார கேடு ஏற்படுத்துவதுடன், திறந்து வெளியில் இறைச்சிகளை வைத்து விற்பனை செய்கிறார்கள். இதனால் பொதுமக்கள், குழந்தைகள் பெரும் உடல் உபாதைகளுக்கு உள்ளாக வேண்டி உள்ளது. இதனை தவிர்க்கும் வகையில், நாகர்கோவில் மாநகராட்சியில் உள்ள 4 மண்டலத்திலும் இறைச்சி கூடம் அமைக்க வேண்டும் என மாநகராட்சி மேயர் அவர்கள் தெரிவித்தார். இதில் தற்போது கிருஷ்ணன் கோவில், இளங்கடையில் இறைச்சி கூட கட்டுமான பணி நிறைவடைய உள்ளது. விரைவில் இவை திறக்கப்படும். இதில் தலா ஒரு கால்நடை மருத்துவர் நியமிக்கப்பட்டு முறைப்படி ஆடுகள், மாடுகள் பரிசோதனை செய்யப்பட்ட பின் இறைச்சிகளை விற்பனைக்காக சான்றிதழ் வழங்கப்பட்டு முத்திரை குத்தப்படும்.

அந்த முத்திரை குத்தப்பட்ட இறைச்சியை தான் விற்பனை செய்ய வேண்டும். முத்திரை இல்லாத இறைச்சி வகைகளை விற்பனை செய்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என மாநகராட்சி மேயர் அவர்கள் தெரிவித்தார். இதே போல் நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இறைச்சி கடைகள் நடத்த மாநகராட்சி அலுவலகத்தில் இருந்து கடை உரிமம் பெற வேண்டும். கடை உரிமம் இல்லாமல் வியாபாரம் நடத்தினால் மாநகராட்சி சார்பில் கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு, கடைகளுக்கு சீல் வைக்கப்படும் என மாநகராட்சி மேயர் தெரிவித்தார்.

ஆய்வில் நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா, மாநகர நல அலுவலர் மருத்துவர் ஆல்பர் மதியரசு, மாநகராட்சி பொறியாளர் ரகுராமன், மண்டல தலைவர்கள் ஜவகர், கு.அகஸ்டினா கோகிலவாணி, சுகாதார அலுவலர்கள் ராஜா, மாமன்ற உறுப்பினர்கள் நெ.கலாராணி, சு.அனிலா, தலைமை செயற்குழு உறுப்பினர் ஆர்.சதாசிவன், மாநகராட்சி அதிகாரிகள் உட்பட கழக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

### நெல்லை கிழக்கு மாநகரத்தில்

# 20 வார்டுகளில் உறுப்பினர் சேர்க்கையை தீவிரப் படுத்துவீர்!

## மாநகரப் பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன் வேண்டுகோள்!

நெல்லை, ஜூன் 14 -

நெல்லை கிழக்கு மாநகரத்தில் உள்ள நெல்லை பேட்டை கிழக்கு,நெல்லை பேட்டை மேற்கு, தச்சநல்லூர் வடக்கு, தச்சநல்லூர் தெற்கு ஆகிய பகுதிகளில் உள்ள 20 வார்டுகளில் வீடு வீடாக சென்று உறுப்பினர் சேர்க்கையில் தீவிரமாக ஈடுபட வேண்டும். என நெல்லை கிழக்கு மாநகர பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிவிப்பில் தெரிவித்திருப்பதாவது.

திராவிட மாடல் முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் ஜூன் 1ம் தேதியன்று மதுரை உத்தங்குடி முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் திடலில் வைத்து பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது.

அந்த பொதுக்குழு கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்ற ப்பட்டன.அதில் மண் மொழிமானம் காத்திட 'ஓரணியில் தமிழ்நாடு'என்ற புதிய உறுப்பினர் சேர்க்கை சிறப்பு தீர்மானமாக முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால் நிறைவேற்றப்பட்டது.மேலும் ஒரு சில தினங்களுக்கு முன்பு காணொளி காட்சி வாயிலாக நடைபெற்ற மாவட்டக் கழக செயலாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள்,சட்டமன்ற உறுப்பினர்கள் ,தொகுதி பார்வையாளர்கள் ஆகியோர் பங்கேற்ற கூட்டத்தில் தமிழ்நாடு உரிமைகள் காக்கப்படவும், திராவிட மாடல் அரசின் திட்டங்கள் தொடர்ந்து மக்களுக்கு சென்று சேரவும், மக்களை ஓரணியில் தமிழ்நாடு என உறுப்பினர் சேர்க்கை மூலம் அறிவாலயத்தில் இணைத்திடவும்,

பணிகளை கழக நிர்வாகிகள் விரைவு படுத்த கேட்டுக் கொண்டார்.மேலும் பூத் வாரியாக குறைந்த பட்சம் 30 சதவீத வாக்காளர்களை தி.மு.க.வின் உறுப்பினராக சேர்க்க வேண்டும் என இலக்கு நிர்ணயித்துள்ளார்.மேலும் வீடு வீடாக சென்று தி.மு.க அரசின் திட்டங்களையும், உரிமை போராட்டங்களையும் எடுத்துக் கூறி உறுப்பினர் சேர்க்கையில் தீவிரமாக ஈடுபடும்படி கேட்டுக்கொண்டுள்ளார்.

ஆகவே முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்கவும்,கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழிகாட்டுதலின்படி,

கழக துணைப் பொதுச் செயலாளர் கழக நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள்,கழக முதன்மைச் செயலாளர் நெல்லை மாவட்டப் பொறுப்பு அமைச்சர் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு,நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ ஆகியோரின் ஆலோசனைப்படி நெல்லை மாவட்ட கிழக்கு மாநகரத்திற்கு உட்பட்ட நெல்லை பேட்டை கிழக்கு,நெல்லை பேட்டை மேற்கு, தச்சநல்லூர் வடக்கு, தச்சநல்லூர் தெற்கு ஆகிய பகுதிகளில் உள்ள வார்டுகளில் பகுதி பொறுப்பாளர்களான நெல்லை பேட்டை கிழக்கு நமச்சிவாயம் கோபி,நெல்லை பேட்டை மேற்கு சங்கர்,தச்சநல்லூர் தெற்கு பூ.சுப்பிரமணியன், தச்சநல்லூர் வடக்கு டாக்டர் சங்கர் மற்றும் இந்த பகுதிகளுக்குட்பட்ட வட்டக் கழக செயலாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழக நிர்வாகிகள், மாநகர சார்பு அணிகளின் நிர்வாகிகள்,பாக முகவர்கள் ஆகியோர் பூத் வாரியாக சென்று வருகின்ற 20ம் தேதி முதல் உறுப்பினர் சேர்க்கையின் பணியில் தீவிரமாக ஈடுபடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.




